# பனித்துளி செய்திகள்!

“அவர் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்!!” (சங்கீதம் 33:9)

துளி செய்திகள் உங்கள் வாழ்வை சாரம் ஏற்றும்..... சவாலிடும்!

(திங்கள்தோறும்)

02.02.2026 துளிகள் – 5


## ‘இயேசுவோடு கொண்ட உறவே’ நமக்கு தெய்வீக மகிமை!

**க**ர்த்தர் உயிர்த்தெழுந்த நாளில், *மகதலேனா மரியாளை* சந்தித்து அவளிடம் தனிப்பட்ட விதத்தில் காட்டிய அன்பின் உறவே நமக்கும் உரியதாய் மாறட்டும்! அந்த உறவு, “தேவனுடைய அந்தராத்துமா” பரிசுத்தவான்களோடு கர்த்தர் வைத்து கொள்ள விரும்பும் அன்பின் உறவென அறிந்து கொள்வோமாக! கர்த்தரோடு கொண்ட உறவின் வளர்ச்சியை சார்ந்தே, நாம் அவருடைய சாயலாய் மாறுகிறோம்! என்ற சத்தியம், நமக்கு நிரந்தர ஜீவன் தருவதாக!

அவரோடு கொண்ட இந்த உறவு, தேவனுக்குப் பிரியமாய் இருக்கிறபடியால், நமக்கு சம்பவிக்க இருக்கும் சூழ்நிலையின் பல்வேறு மரண கண்ணியிலிருந்தும் நம்மை உயிர்ப்பிக்க வல்லமை கொண்டதாயிருக்கிறது. மேலும், நம்முடைய ஆத்துமாவில் ‘அவருடைய மகிமையை’ தங்கச் செய்வதாயிருக்கிறது. நம்மை விட்டு கடந்து சென்ற பரிசுத்தவான்கள் அனைவருக்கும் ‘தேவன் தன்னுடைய இனிய உறவை’ வழங்கி ஆசீர்வதித்திருப்பார் என்றே நாம் உறுதிபட கூறிட முடியும்!

**– ரத்னம்**